செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

இல. 1067 | 1970 ஜூன் 28 ஞாயிற்றுக்கிழமை | விலை சதம் 5

University of Jaffna Sri Lanka
RECEIVED
7
Periodicals Division
Library

# ஆபாசப் புத்தங்களுக்கு விரைவில் தடை வரும்

**ஆபாசப் புத்தகங்கள், ஆபாசப் புகைப் படங்கள் ஆகியவை நாட்டில் கள்ளத்தனமாக இறக்குமதி செய்வதை முறியடிப்பதற்காக சுங்கப் பகுதியில் விசேஷ பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட உள்ளது.**

பொலீஸாரின் கடும் நடவடிக்கைகளுக்கு மத்தியில், பெருந்தொகையான ஆபாசப் புத்தகங்களும், ஆபாசப் புகைப்படங்களும் நடைபாதைகளில் வைத்து விற்கப்படுவதாக ரகசியப் பொலீஸார் வெளியிட்டுள்ள அறிக்கையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

தற்பொழுது இவற்றின் புழக்கம் அதிகரித்திருப்பதாகவும், நவீன காம, களியாட்டங்களைச் சித்திரிக்கும் புகைப்படங்கள், புத்தகங்கள் ஆகியவை விற்பனைக்காக சகல இடங்களிலும் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இறக்குமதி செய்யப்படும் தரமான புத்தங்களுடன் இந்த ஆபாசப் புத்தகங்களும் கள்ளத்தனமாக இறக்குமதி செய்யப்படுவதாக சுங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இறக்குமதியாகும் புத்தகப் பொதிகளை ஒவ்வொன்று ஒவ்வொன்றாக சோதனை செய்ய முடியாத நிலையில் சுங்கப் பகுதியினர் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுங்கப் பகுதியினால் ஏற்படுத்தப்பட உள்ள விசேஷ பிரிவு இனிமேல் இறக்குமதியாகும் ஒவ்வொரு பொதியையும் கவனமாகப் பரிசீலனை செய்யும்.

தற்பொழுது மருதானை, கோட்டை ஆகிய இடங்களில் ஆபாசப் புத்தகங்களும், ஆபாசப் புகைப்படங்களும் பெரும் அளவில் விற்பனைக்கு உள்ளன. (5)

## மீனாட்சி



என்னுங்க, வெளிநாட்டு ஹிப்பிகள் மீது பொலீஸ் கடைக்கண் என்றால், உள்நாட்டு ஹிப்பிகளுக்கு ஒன்றுமில்லையா?


ஆமாங்க, அவர்களுக்குச் சற்றே டீ- டீ- ரி- தெளித்து விட்டால் போதும் என்பது தெரிந்ததுதானே!

## மூதவை இன்று கூடுகிறது

இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கம் மீதான விவாதம் மூதவையில் ஆரம்பமாகிறது.

தமிழரசுக் கட்சியினால் நாடாளுமன்றத்தில் முன்னர் சமர்பிக்கப்பட்ட மூன்று திருத்தப் பிரேரணைகளும் இன்று மூதவையிலும் சமர்பிக்கப்படும்.

செனட்டர் எம். திருச்செல்வம் அப் பிரேரணைகளைச் சமர்பித்து முன் மொழிவார் செனட்டர் திரு. நடராசா வழி மொழிவார். (5)



ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் டஸ்சல்டார்ப் நகரில் 29-வது ஐரோப்பிய காலணி கண்காட்சி நடைபெற்றது. இந்தக் கண்காட்சியில் குழந்தைகள் முதல் "குடுகுடு" கிழவர் வரை அணியும் பல வண்ணங்களில் பூட்சுகள் இடம்பெற்றிருந்தன. பூப்போன்ற மிருதுவான தன்மை கொண்ட சுற்றுப்புறங்கள் கொண்ட நவீன ரக பூட்சு ஒன்றைக் கண்டு மகிழ்ந்து புன்சிரிப்பைக் கொட்டுகிறாள் இந்தப் பெண். (ம)

## வண. தேவ மொட்டாவ விடுதலை செய்யப்பட்டார்

கைக்குண்டுகள் வைத்திருந்ததாக சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வண. தேவமொட்டாவ அமரவன்ச தேரோவையும் மற்றும் நால்வரையும் நீர்கொழும்பு நீதிபதி திரு. பி. பிரம்புக்வெல நேற்று விடுதலை செய்தார்.

இம்மாதம் 2-ம் திகதி நீர்கொழும்புப் பொலீஸாரால் கைக்குண்டுகள் வைத்திருந்ததாக சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட இந்த ஐந்து பேரும் நேற்று மீண்டும் நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்ய போதிய சாட்சியங்கள் இல்லை என அட்டோர்னி ஜெனரல் அறிக்கை சமர்ப்பித்திருப்பதாக அரசாங்க தரப்பு வழக்கறிஞர் திரு. சி. குணவர்தன கூறியதை அடுத்தே நீதிபதி அவர்களை விடுதலை செய்தார்.

இது சம்பந்தமாக அரசாங்க தரப்பு வழக்கறிஞர் திரு. சிஸில் குணவர்த்தன நீர்கொழும்பு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் கூறியதாவது:-

"பொலீஸ் விசாரணைகளை அட்டோர்னி ஜெனரல் ஆராய்ந்து விட்டபடியால், சந்தேக நபர்களை விடுதலை செய்யும்படி கோருகிறேன். சேகரிக்கப்பட்ட சாட்சியங்களின்படி, ஆறுவது எதிரியான சார்லிஸ் நோனாவுக்குத் தெரியக் கூடியதாகவோ அல்லது மற்றும் எதிரிகளின் அறிவுக்கு எட்டிய முறையிலோ இத்தடை செய்யப்பட்ட பொருட்கள் அங்கு இருந்தன என்பதற்கு ஆதாரமில்லை.

"தகவலின் பேரில் பொலீஸார் ஜூன் 2-ந் திகதி அதிகாலையில் சார்லிஸ் நோனா வீட்டைச் சோதனையிட்டனர். அப்பொழுது முதலாவது எதிரி வண. தேவ மொட்டாவ அமரவன்ஸ தேரோ பாயில் படுத்திருந்தார். மற்ற நால்வரும் விருந்தையில் படுத்திருந்தனர். சார்லிஸ் நோனா அடுக்களையில் படுத்திருந்தார்.

"மண்டபத்தில் இருந்த அலுமாரி ஒன்றின் அருகாமையில் ஒரு

(4-ம் பக்கம் பார்க்க)

## ஈழத்து காட்சி மண்டபம் பற்றி விசாரணை நடக்கும்?

ஒஸாகாவில் நடைபெறும் சர்வதேச பொருட் காட்சியில் இடம் பெற்றுள்ள இலங்கையின் காட்சி மண்டபம் பற்றி விசாரணை செய்யும்படி பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் ஆகியோரர் கேட்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் காட்சி மண்டபம் ஏனைய நாடுகளின் காட்சி மண்டபங்களைவிட தரம் குறைந்தது என்று பல கலைஞர்களும், கலைஞர் ஸ்தாபனங்களும் முறையிட்டுள்ளன.

"எக்ஸ்போ—70" கண் காட்சியில் இலங்கை சார்பாகப் பங்கு பற்றுவதற்கிருந்த நடனக் குழு ஒன்றின் உடைகளுக்காக 18 ஆயிரம் ரூபா செலவழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

முன்னைய அரசாங்கம், "எக்ஸ்போ — 70"ல் உள்ள இலங்கையின் காட்சி மண்டபம் பற்றி அதிக சிரத்தை எடுக்கவில்லை என்றும் ஆனால் பெருந் தொகையான பணத்தை வீண் விரயம் செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சப்போஸ்ட் மிஸ்ரஸ்-பியோன் காதல் முடிவு

# காதலனுடன் எடுபட காதலி விரும்பவில்லை

## அவமானத்துக்குப் பயந்து தற்கொலை செய்தாள்

**"எங்கள் காதல் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்தது. விரைவில் திருமணம் புரிய வேண்டும் என அவர் விரும்பினர்- ஆனல் எங்கள் காதலுக்கு எனது வீட்டில் ஆதரவு இருக்கவில்லை. எங்காவது களவாக ஓடிப் போய் இன்ப வாழ்க்கை நடத்தலாம் என அவர் என்னை வற்புறுத்தினர். ஆனல் இத்தகைய நடத்தையால் எனது குடும்பத்துக்கு தாளாத அவமானத்தை ஏற்படுத்த நான் விரும்பவில்லை.**

தியகக உபதபாற் கந்தோர் சப்போஸ்ட் மிஸ்ட்ரஸான சுமணவதி என்னும் அழகிய இளம் பெண் நஞ்சு அருந்திய பின் உயிருக்கு மன்ருடிக் கொண்டிருந்த வேளையில், மொரவாக்க பொலீஸ் நிலைய அதிகாரிகளுக்கு அளித்த வாக்குமூலத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டு உள்ளார்.

சுமணவதியின் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையின் போது கொழும்பு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எதர்டன் வீரக்கோன் முன்னிலையில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப் பட்டது.

விசாரணையின்போது சாட்சியமளித்த டபிள்யூ. டி. கமலாவதி கூறியதாவது:–

"காலஞ்சென்ற சுமணவதி எனது தங்கையாராவார். எனது வீட்டில் தங்கியிருந்தவாறே அவர் தியகக உபதபாற் கந்தோர் சப்போஸ்ட் மிஸ்ட்ரஸாகக் கடமை ஆற்றி வந்தார்.

"சுமணவதிக்கும் அதே உபதபாற் கந்தோரில் பியோனுக இருக்கும் ஒரு வாலிபருக்கும் இடையில் காதல் உறவு ஏற்பட்டு உள்ளது என்பதை நான் அறிந்தேன்

"இந்தக் காதல் பொருந்தாக் காதல் என நான் சுமணவதிக்குப் புத்திமதி கூறினேன். இதனல் அவள் மனமொடிந்து போய் இருந்தாள். எனவே அம்மாவுடன் போய் இருக்குமாறு அனுப்பி வைத்தேன் அங்கே அவள் நஞ்சு அருந்திய செய்தி எனக்குப் பின்னர் தெரிய வந்தது" என்ருர்.

மாத்தறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சுமணவதி பின்னர் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே மரணமானர் எனத் தெரிவிக்கப் பட்டது.

தற்கொலை எனத் தீர்ப்பளித்தார் திடீர் மரண விசாரணை அதிகாரி. (ம)

## தங்க ஆபரணங்களின் விலையை குறைக்க திட்டம்

நாட்டில் உள்ள நகைக் கடைக்காரர்கள் மக்களிடம் இருந்து கொள்ளை லாபம் பெறுகின்றனர் எனப் புகார் கூறப்பட்டதை அடுத்து, ஆபரணங்கள் செய்வதற்கென நகைக்கடைக்காரர்கள் மக்ளிடம் இருந்து பெறும் கூலி விபரம் பற்றி விசாரணை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

திருமணம் செய்யும் இள ஜோடி ஒன்று தைவிரல் மோதிரம் செய்வதாக இருந்தாலும் எக்கச்சக்கமாகப் பணம் செலவிட வேண்டி இருக்கிறது எனப் புகார் தெரிவிக்கப்பட்டது. இதை அடுத்தே மேற்கண்ட நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

மோதிரம், காப்பு, சங்கிலி ஆகியன செய்வதற்கு வசூலிக்கப்படும் கட்டணங்களுக்கு கட்டுப்பாடு விதிப்பது பற்றி ஆலோசனை செய்யப்படுகிறது.

கொழும்பிலும், மற்றும் பகுதிகளிலும் தங்க ஆபரண வியாபாரம் வம்சாவழிப் பிரஜைகளின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளதால் இனி இதைப் பரவலாக்கும் வழிவகைகளை ஆராய அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது. (ம)

## பஸ் நிலையத்தில் திரிந்த பெண் இரட்சணிய சேனையில்

பதினெட்டு வயது இளம் பெண் ஒருத்தி புறக்கோட்டை பஸ் நிலையத்தில் சந்தேகத்திற்கு இடமான நிலையில் காணப்பட்டதாகக் கூறி அவளை கொழும்பு பிரதம நீதவான் முன்னிலையில் பொலீசார் ஆஜர் செய்தனர்.

என்சோகாமி என்னும் இந்தப் பெண்ணை இரட்சணிய சேனைக்கு அனுப்பும்படி உத்தரவிட்டார் நீதவான்.

"நான் எனது சிற்றன்னையின் கொடுமை தாங்காமல் வீட்டை விட்டு வெளியேறினேன். பின்னர் ஒருவரின் ஆசைநாயகியாக இருந்தேன்- அவரும் என்னைக் கைவிட்டதால் நான் கொழும்புக்கு வந்தேன்" என என்சோகாமி தனது சாட்சியத்தில் கூறினள். (ம)

### நகரின் சேரி ஒழிப்பு

இதுகாலவரை சேரி ஒழிப்புப் பிரச்சினையில் முனிசிப்பல் சபையும் மத்திய அரசும் நுனிப்புல் மேய்ந்து வந்ததை யாவரும் அறிவர். இப்போது வீடமைப்பு அமைச்சர் இப்பிரச்சினையைப் பரி பூரணமாக விசாரித்தறிய ஒரு சபையை நியமித்துள்ளார். எனவே அச்சபை சேரிகளில் உள்ள படு மோச நிலையைத் தத்ரூபமாக வெளியிடும் என்றே யாவரும் எதிர்பார்க்கின்றனர். அமைச்சர் அவர்களுக்கும் இச்சேரிகளின் நிலையும் அங்கு வாழ்வோரின் பரிதாப நிலையும் நன்கு தெரிந்த ஒன்ருகும். இன்னும் இச்சேரிகளின் வீடுகளுக்குச் சொந்தக்காரர்களாயுள்ளவர்கள் சேரிகளில் வாழ்வோருக்கு எவ்விதமான வசதிகளும் அளிக்காது எமகண்டம் கொடுப்பதையும் அமைச்சர் அவர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் உறைப்பாக வற்புறுத்தி வைக்க விரும்புகிறேம். இச்சேரிகளை அழித்துக் கட்டுவது அமைச்சரின் முதலாவது திட்டமாக இருத்தல் வேண்டும். சுகாதாரச் சூழ்நிலையில் இச்சேரிகளில் வாழ்வோர் வாழக்கூடிய புதிய வீடுகள் விரைவில் உருவாக வழிவகுத்தல் வேண்டும்.

தந்தி

## கைவிரல் அடையாள நிபுணருக்கு எச்சரிக்கை

"நீதிமன்றத்தைச் சிரிப்புக்கு இடமாக்கி விட்டீர்" என்று திருமலை நீதவான் திரு. விக்ரமசேகரா களவு வழக்கு ஒன்றில் தன் முன் ஆஜரான கைவிரல் அடையாள உதவி அதிகாரியைப் பார்த்துச் சொன்னர்.

12 ரூபா பெறுமதியான இரும்பு பைப் ஒன்றை திருமலை பௌத்த நிலையம் ஒன்றில் இருந்து களவு எடுத்ததாக ஆறுமுகம் கந்தசாமி என்பவர் மீது இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு இருந்தது.

விசாரணை முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதவான் எதிரியின் கைவிரல் அடையாளங்களை கைவிரல் அடையாள நிபுணருக்கு அனுப்பும்படி உத்தரவிட்டு தண்டனை விதிப்பதை ஒத்திவைத்தார்.

மீண்டும் வழக்கு தண்டனை விதிப்பதற்காக நீதவான் முன் வந்த பொழுது, கைவிரல் அடையாள நிபுணரின் அறிக்கை நீதிபதி முன் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் எதிரி முன் குற்றப் படாதவர் என்று கூறப்பட்டு இருந்தது. ஆனல் பொலீசாரோ எதிரி பலமுறை சிறை சென்றுள்ளார் என்றும் அவர் ஒரு ஐ. ஆர். சி. என்றும் தெரிவிக்கவே நீதவான் கைவிரல் அடையாள நிபுணரை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டிருந்தார். அதன்படி அந்நிபுணர் ஜூன் 24ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகி முன்னர் சமர்ப்பித்த அறிக்கை தவறு என்றும் சம்பந்தப்பட்டவர் மூன்று முறை குற்றப்பட்டு சிறை சென்றவர் என்றும் நீதவானிடம் தெரிவித்தார்.

அப்பொழுது நீதவான், கைவிரல் அடையாள நிபுணரான திரு- பெர்னண்டோவைப் பலமாக எச்சரித்ததுடன், "நீர் இந் நீதிமன்றத்தை சிரிப்புக்கு இடமாக்கி விட்டீர்" என்றும் கண்டித்தார்.

பழைய குற்றங்களை ஒப்புக் கொண்ட எதிரிக்கு ஐம்பது ரூபா அபராதம் அல்லது ஆறுமாதச் சிறைத்தண்டனை விதித்ததுடன், குற்றத் தடுப்புச் சட்டத்தின் கீழ் மேலும் இரண்டு ஆண்டு கடுங் காவல் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (ம-287)

### தற்கொலை முயற்சி

நாவலப்பிட்டி, ஜூன், 27

முதலாளி தனது மைத்துனியை மணஞ் செய்து வைப்பதாகக் கூறி தன் கடையில் வேலை கொடுத்தாராம். பல வருடங்களாகியும் திருமணம் பற்றி பேசாததால் என்றெக்ஸ் அருந்தி தற்கொலையிலீடுபட்டாராம்.

நாவலப்பிட்டி நகர கடை ஒன்றில் என்றெக்ஸும் மண்ணெண்ணெயும் கலந்து அருந்திய வாலிபர் ஒருவர் நாவலப்பிட்டி ஆஸ்பத்திரியில் உடனே அனுமதிக்கப்பட்டதால் உயிர் பிழைத்துக் கொண்டார்.

விசாரணையின் போது மேற்கண்ட தகவல் வெளியாகியது. தற்கொலை முயற்சியிலீடுபட்டதற்காக பொலீசார் வாலிபர் மேல் வழக்கு தொடர்ந்துள்ளனர். (ம-215)

### தெனமனுக்கு சுகயீனம்

வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் திரு. தெனமன் சுகவீனமுற்றிருக்கிருர். அடுத்து சில நாட்களுக்கான உத்தியோக கருமங்களை அவர் ரத்துச் செய்துள்ளார். (ம)

### அரசாங்கமே கட்டி முடிக்கும்

இலங்கையில் நிர்மாணிக்கப்பட உள்ள ஆடம்பர ஹோட்டலை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் மூலம் கட்டி முடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (ம)

### 15,000 பேருக்கு இந்த ஆண்டில் வேலை

கந்தானை, ஜூன், 27

இந்த ஆண்டுக்குள் 15 ஆயிரம் இளைஞர்களுக்கு இந்த அரசாங்கம் வேலை வழங்கும் என தான் நம்புவதாக கைத்தொழில், விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சர் திரு. ரி. பி- சுபசிங்க கட்டுநாயக்காவில் ஒரு மாணவர் சங்க கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். (ம)

## குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நிறுத்தப்படும்

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நிறுத்தி விடுவதென சுகாதார அமைச்சர் திரு. டபிள்யூ. பி- ஜி. ஆரியதாச தீர்மானித்துள்ளார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட குடும்பக் கட்டுப்பாடு திட்டம் பற்றி அமைச்சர் அறிக்கை கோரி உள்ளார்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் தடைப்பிடிப்பதற்காக எத்தனை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்? இதுவரை குடும்பக் கட்டுப்பாட்டுக்கு எவ்வளவு செலவாகியது என்பதை எல்லாம் கண்டறிய அமைச்சர் நடவடிக்கை எடுத்து வருகிருர்.

குடும்பக் கட்டுப்பாடு என்ற பெயரில் பெரும் மோசடிகள் நடைபெற்றுள்ளதாகவும் புகார் கூறப்பட்டுள்ளது. (ம)

**தந்தி**
**சிறு விளம்பரங்கள்**

### வசியம்

காதலில் வெற்றியை எதிர்பார்ப்பவர்களுக்கு தவருத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குப்த வித்தியாதனய, ஊருப்பொல,

R. 66061

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'யாருக்கும் சொல்லாதே' என்றாராம்!

# தண்ணீர் கேட்டு வந்து தாயாக்கினார் என்னை

### ஜீவனாம்சம் வேண்டும் என கோருகிறாள் அந்த அபலை

"குணதிலகா எனது மைத்துனராவார். சிறு வயது முதல் எங்களுக்குள் நட்பு உண்டு. அடிக்கடி நாங்கள் சந்தித்துக் கொள்வது வழக்கம். ஒரு நாள் நான் வீட்டில் தனித்திருந்தேன். அப்போது அவர் வந்தார். குடிக்கத் தண்ணீர் தரும்படி கேட்டார். தண்ணீர் கொண்டு வர நான் உள் வீட்டுக்குச் சென்றபோது பின்னால் வந்த அவர் என்னைக் கட்டி அணைத்து, முத்தம் கொடுத்து உடலுறவு கொண்டார்."

குளியாப்பிட்டி நீதவான் திரு. எம். எஸ். தொரியா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட ஜீவனாம்ச வழக்கு ஒன்றில் சாட்சியமளித்த ஏ. எம். அக்னஸ் என்னும் அழகிய இளம் பெண் மேற்கண்டவாறு கூறினார்.

ஏ. எம். குணதிலகா என்னும் இளைஞரிடம் தனக்கும் தனது குழந்தை கீர்த்திலதாவுக்கும் ஜீவனாம்சம் கோரி அக்னஸ் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

அக்னஸ் தனது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:-

"தண்ணீர் கொண்டு வர நான் உள் வீட்டுக்குச் சென்றபோது குணதிலகா என்னைத் தொடர்ந்து வந்ததை நான் கவனிக்கவில்லை. அவர் என்னை ஒரு மூலைக்கு இழுத்துச் சென்று உடலுறவு கொண்டார். இதுபற்றி யாருக்கும் சொல்ல வேண்டாம் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்."

நீதவான்:- "அப்போது வீட்டில் யாரும் இருக்கவில்லையா?"

அக்னஸ்:- "அப்பா எங்கோ போய்விட்டார். தங்கை பக்கத்து வீட்டுக்குச் சென்றிருந்தாள். வீட்டில் யாரும் இல்லாத நேரம் பார்த்துத்தான் அவர் வருவது வழக்கம்."

மனுதார் தரப்பு வழக்கறிஞர்:- "இந்தச் சந்தர்ப்பத்தின் பின்னர் அவர் வருவதில்லையா?"

அக்னஸ்:- "அதன் பின்னர் அவர் ஏழு, எட்டு தடவைகள் வந்துள்ளார். இரு மாதங்களின் பின்னர், நான் கர்ப்பம் தரித்துள்ள விஷயத்தை அவரிடம் தெரிவித்தேன். ஒரு நாள் அவரின் தாய் வீட்டுக்கு வந்து அப்பாவிடம் பணம் கொடுத்து கருவை அழித்து விடும்படி கேட்டார். ஆனால் அப்பா மறுத்து விட்டார். நான் ஏழு மாதக் கர்ப்பிணியாக இருந்த போது ஒரு நாள் வீட்டுக்கு வந்த குணதிலகா என்னுடன் சண்டை போட்டார். நான் இதுபற்றி பொலீஸில் புகார் செய்தேன்."

நீதவான்:- "பொலீஸார் என்ன செய்தனர்?"

அக்னஸ்:- "பொலீஸ் நிலையத்துக்கு வரும்படி அவரிடம் கூறுமாறு தெரிவித்தனர். ஆனால் குணதிலகா பொலீஸ் நிலையத்துக்குச் செல்லவில்லை. 1969-ம் ஆண்டு டிசம்பர் 16-ம் திகதி நான் கீர்த்திலதாவைப் பெற்றெடுத்தேன். குணதிலகா மாதம் 300 ரூபா ஊதியம் பெறுகிறார். எனக்கு 50 ரூபா ஜீவனாம்சம் தரும்படி உத்தரவிடுங்கள் ஐயா!"

இந்தக் கட்டத்தில் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (ம)

---

### பண்டைப் புகழ் வாய்ந்த புக்காரா புது நகராகும்

சோவியத் ஆசியக் குடியரசான உஸ்பெகிஸ்தானின் புதைபொருள் ஆய்வாளர்கள் புக்காராவின் வயது 20000 ஆண்டுகளாகும் என நிறுவி உள்ளார்கள். உஸ்பெக் விஞ்ஞானப் பேரவையின் விசேஷ தொல்பொருள் ஆய்வுக் குழுக்களும், ஆராய்ச்சிக் குழுக்களும் நடத்திய பரிசோதனைகள் மூலமே இந்த நகரின் சரியான ஜனன தினம் கணிக்கப்பட்டுள்ளது.

தனது 2500-வது ஆண்டுத் தினத்தை அண்மையில் அனுஷ்டிக்கவிருக்கும் சமர்கந்தை அடுத்த உஸ்பெகிஸ்தானின் புராதன நகரம் புக்காராவாகும். சோவியத் ஆட்சிக் காலத்தில் புக்காரா முக்கிய தொழில், கலாசார மையமாகி உள்ளது.

உயர்ரக நெடுஞ்சாலைகளும், உயர் "வொல்டேஜ்" மின் கம்பிகளும் பரந்த பாலைவனங்களுக்கு ஊடாகச் செல்கின்றன. இவை பாரிய தங்கச் சுரங்கங்களையும், ரசாயன தொழிலகங்களையும் இணைக்கின்றன. புக்காரா இஸ்லாமியப் பேரறிஞர் இமாம் புஹாரி (ரஹ்) பிறப்பிடமாகும். (ம)

---

### பன்னிரண்டு வயது சிறுமி தற்கொலை செய்தாள்

"எனது வாழ்நாளில் 12 வயது பருவமாகாத பெண் ஒருத்தி நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்ட முதல் விசாரணை இதுவாகும். இறப்பிற்கு உண்மைக் காரணம் தெரியவில்லை. விசாரணையில் தற்கொலை என தெரியவருகிறது."

இவ்வாறு நாவலப்பிட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எச். பி. அத்தநாயக்க, கலமுதுன தோட்டத்தைச் சேர்ந்த ஏ. எம். பிசோ மெனிக்கே (12 வயது) பருவமாகாத பெண் என்ட்ரெக்ஸ் 22 அருந்தி நாவலப்பிட்டி ஆஸ்பத்திரியில் அநுமதிக்கு முன் மரணமானதை அடுத்து நடந்த விசாரணையில் தீர்ப்பளித்தார்.

இறந்த பெண்ணின் தந்தை ஏ. எம். டிங்கிரி பண்டா தனது சாட்சியத்தில் தனது 8-வது மகள் காலஞ் சென்றவளை பல வீடுகளில் வேலைக்கு அமர்த்தியிருந்ததாகவும் இரு தினங்களுக்கு முன் வீட்டுக்கு வந்தவள் இப்படிச் செய்து கொண்டாள் என்றும் கூறினார்.

மற்றும் பலர் சாட்சியத்தின் பின் தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது. (ம-215)

---

### ஜவுளி விலை குறையாது

ஜவுளிகளின் விலைகள் செப்டம்பர் வரை குறையாது எனத் தெரிய வருகிறது. ஏற்கனவே வெளிநாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்ட ஜவுளிகள் யாவும் பழைய விலைக்கே விற்கப்பட்டு புது ஜவுளிகளை விலை குறைத்து விற்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. (ம)

---

### தம்பதிகளுக்கு பிணை

திருகோணமலை, ஜூன் 27

டாக்சி சாரதி ஒருவரின் வீட்டில் தங்க இடம் கேட்டு, பின்னர் ரூபா 2,500 பெறுமதியான நகைகளுடன் கம்பிநீட்டியதாக சந்தேகத்தின் பேரில் பொலீசாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட வரதராஜசிங்கம் என்ற இளைஞனையும், நாகபூஷணி என்ற அவரது இளம் மனைவியையும் திருமலை நீதவான் திரு. விக்ரமசேகரா தலா 2,500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார். (ம-287)

---

### சந்தையில் தீ விபத்து கடைகள் தீக்கிரையாயின

சிலாபம், ஜூன் 27

சிலாபம் மார்க்கட்டில் ஏற்பட்ட பயங்கர தீவிபத்தினால் மூன்று இறைச்சிக் கடைகள் உட்பட ஏழு கடைகள் சாம்பராகின. மீன் விற்பதற்காக அமைக்கப்பட்டிருந்த இடமும் எரிந்தது.

இறைச்சிக் கடைகளுக்குப் பின் பகுதியில் வசித்து வந்த ஒரு குடும்பத்தினரின் செயலால் ஏற்பட்ட இத் தீவிபத்தில் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் நட்டம் எனத் தெரியவருகிறது.

இத் தீவிபத்து சம்பந்தமாக ஒரு பெண்ணை பொலீசார் கைது செய்து ரிமாண்டில் வைத்துள்ளனர். மேல் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (ம-53)

---

### பிணையில் செல்ல அனுமதி

திருகோணமலை, ஜூன் 27

மூன்று ரூபா பெறுமதியான தேபிள் கம்பிகளை களவெடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்த குணபால, இராசமாணிக்கம் ஆகிய இரு நபர்களையும் தலா 1,000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த திருமலை நீதவான் திரு. விக்ரமசேகரா, வழக்கு விசாரணையை ஜூலை 30-க்கு ஒத்திவைத்தார். (ம-287)

---


### பாரிசவாதம் அல்லது போலியோ

போன்ற கொடிய வியாதிகளையிட்டும் அநேக காலமாக பலவிதமான மருந்துகளை செய்தும் குணப்படாது மனம் வேதனை அடைந்து எவ்வளவு காலம் சென்ற கொடிய வாத நோய்களானாலும் சரியே. எங்கள் இராஜ வைத்திய அனுபவங்களின் மூலம் ஒரு லட்சத்துக்கு மேற் கொண்ட வியாதியஸ்தர்களை குணப்படுத்தி கைகண்ட

### பாரிசவாத தைலம்

கீழ்க் குறிப்பிட்ட வியாதியஸ்தர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் — தங்களின் வியாதிகளுக்கு இன்றே உபயோகித்து பூரண சித்தியடையுங்கள். தீரும் வியாதிகள் சகல வகைப்பட்ட பாரிச வாதம், இளம்பிள்ளை வாதம், முடக்கு வாதம், நடுக்கு வாதம், பச்சை வாதம், பக்க வாதம், அண்ட வாதம், இடுப்பு வாதம், குடல் வாதம், நெஞ்சு அல்லது மாரடைப்பு, மொளிகளில் வீக்கம், கற்றமும்பு, குதிக்கால் நரம்புகள் வலி, வீக்கம், உடம்பில் பற்பல ஊரல்கள், சொறி, சிரங்கு அல்லது கட்டிகள், குடிவேதம், புழு மேய்ச்சல், உடம்பில் கரும் புள்ளிகள், வெள்ளை படருதல், சிறுவர்களுக்கு கைகால் உறுப்புகள் பலஹீனம், முடக்கம், சோர்வு, கழுத்து, முதுகந்தண்டு, இடுப்பு பலஹீனம், தசை கரைந்து, கணுக்குக்கு கணு வீக்கம், முடக்கம் போன்ற போலியோ நோய்களையும் மேற்படி மேலே குறிக்கப்பட்ட எவ்வித கடினமான நோய்களையும் ஏழு தினம் சிகிச்சையின் பின் குணம் காண்பீர்கள்:— சகல விபரங்களையும் மருந்துடன் அனுப்பி வைப்போம். நேரிலும் அல்லது வி. பி. பி. தபாலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

12 அவுன்ஸ் போத்தல் ஒன்றுக்கு ரூ. 100/-, 6 அவுன்ஸ் ரூ. 50/-
2 அவுன்ஸ் ரூ. 20/-. தபால் செலவு சதம் -/90.

### இழந்த சக்தியை மீண்டும் பெறுவதற்கு ரிஷி மன்மதன ஹல்வா

இன்றே சாப்பிடத் தவறாதீர்கள்

தெரிந்தும் தெரியாமலும் துர்ப்பழக்க வழக்கங்களில் ஈடுபட்டு தனது சக்தியை இழந்து அவதிப்படுவோர்களுக்கும் கொடிய கனவுகளால் தனது சக்தியை இழந்து இத்தன்மையான வகையில் நீர் வியாதிகள் ஏற்பட்டு நீர், சீனி போகுதல், மாவு, வெண்ணெய் போன்ற வகையில் வெளியாகி இளைப்பு, இருமல், சோகை, மூட்டு வலிகள், அல்லது வீக்கம் ஏற்பட்டு நரம்புத் தளர்ச்சியுண்டாகிய ஆண் - பெண் இரு சாரார்களுக்கும் இல்லற வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு உலகத்தில் ஜீவியம் செய்யவே விருப்பமில்லாமல் மனவேதனைப்படும் அன்பர்களுக்கு இதோ உங்களுக்குப் புத்துயிர் தந்து இன்புற்று வாழ எங்களின் ரிஷி மன்மதன ஹல்வாவை சாப்பிடுவீர்களானால் ஆச்சரியப்படக்கூடிய வகையில் உங்கள் வாழ்க்கையை பிரதிபலிக்கச் செய்யும் ஓர் அற்புத சஞ்சீவி இந்த ரிஷி மன்மதன ஹல்வா.

30 நாள் மருந்து ரூ. 40/-, 15 நாள் மருந்து ரூ. 20/-
தபால் செலவு -/70 சதம்.

வி. பி. பி- தபாலில் பெற்றுக் கொள்ளலாம்-

கடந்த 787 ஆண்டுகளாக கண்டி பூர்வீக மன்னர்களுக்கும், பல லட்சக்கணக்கான வியாதியஸ்தர்களுக்கும் பரம்பரை, பரம்பரையாகச் சிகிச்சை செய்து அளவற்ற பல நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றுவரும் இராஜ வைத்தியர் வைத்தியரெத்தின முதலியார் அவர்கள் வகை.

**ஏ. எல். எம். ஜே. டி. உடையார்,**
வாத ரோக நிபுணர், இராஜ வைத்தியர்,
மடவலை பஜார், கண்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் தேவைகளை நிறைவேற்றுங்கள்

## காங்கேசன்துறை ப. ச. தலைவர் வேண்டுகோள்

காங்கேசன்துறை, ஜூன 27

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி, மயிலிட்டி மீன்பிடித் துறை முகம், மகாவலி கங்கை திசை திருப்புதல், வடக்குக் கிழக்குப் பல்கலைக் கழகம் ஆகிய திட்டங்களை இந்த அரசாங்கம் குறைவின்றி நிறைவேற்றி வைக்கும் எனத் தான் நம்புவதாக காங்கேசன்துறை பட்டின சபைத் தலைவர் திரு. க. ஜெயபால சிங்கம் தெரிவித்தார்.

காங்கேசன்துறை மாவட்ட அபிவிருத்தி சபையை வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தபோது உரையாற்றிய



க. ஜெயபாலசிங்கம்

போதே திரு. ஜெயபாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் தனது உரையிற் குறிப்பிட்டதாவது:-

"அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் அமோக வெற்றியை பெற்று அரசாங்கம் அமைத்தபின் முதல் தடவையாக வட பகுதிக்கு விஜயம் செய்யும் தங்களையும், தங்கள் தோழர்களையும் நான் எனது பட்டின மக்கள் சார்பில் மட்டுமல்லாது, யாழ்ப்பாண மக்களின் சார்பிலும் வரவேற்கிறேன். இவ்வேளையில் வடபகுதி மக்களை எதிர் நோக்கியுள்ள நான்கு முக்கிய பிரச்சினைகளை நான் உங்கள் முன் சமர்ப்பிப்பது அத்தியாவசியமென கருதுகிறேன்.

"நாட்டில் போதிய பணமின்மையால் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி வேலைகள் திடீரென தடைப்பட்டு விடுமோ என்ற அச்சம் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ளது.

"துறைமுக அபிவிருத்தி வேலைகளைத் தொடர்ந்து அமுல் நடத்தி வெகுவிரைவில் துறைமுக திறப்பு விழாவை நடத்துவதுடன், போதிய பண்ட சாலைகளையும் கட்டி பல கப்பல்களை வடபகுதிக்கு திசை திருப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

"இலங்கையிலுள்ள சிறந்த மீன்பிடித் துறைகளில் மயிலிட்டியும் ஒன்று என்பதை யாவரும் அறிந்ததே. மீன்பிடித் தொழில் விருத்தியடைய வேண்டுமாயின் மீன்பிடித் துறைமுகம் இருக்க வேண்டியது அவசியம். ஆகையால் மயிலிட்டி மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி வேலைகளை தொடர்ந்து நடத்த ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

"மகாவலிகங்கை வடக்கே திசை திருப்பப்பட்டு மேலும் போதிய தண்ணீர் வசதி பெற்றால் கமத்தொழில் மேலும் அபிவிருத்தியடைவதுடன், நமது நாடும் முக்கிய மூலாதாரப் பொருட்களில் தன் நிறைவைக் காணலாம். மகாவலி கங்கைத் திட்டம் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு வடக்குக்கு திசை திருப்புமாறு சிபார்சு செய்தால், இத் திட்டத்தை கூடிய கெதியில், நாட்டு நன்மைகாக ஆரம்பிப்பீர்களென நம்புகின்றேன்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல்கலைக் கழகம் நிறுவப்படும் என சிம்மாசனப் பிரசங்கத்தில் ஆட்சியாளர் குறிப்பிட்டதை நான் வரவேற்கின்றேன். ஆனல் இதைக் கூடிய விரைவில் நடைமுறைக்கு கொண்டு வருதல் உங்களது பொறுப்பாகும்.

"இறுதியாக ஒரு தமிழ் மகனை உங்கள் மந்திரி சபையில் மந்திரியாக்கியதற்கும் மற்ருேர் தமிழ் மகனை நியமன அங்கத்தவனகத் தெரிந்தமைக்கும் தமிழ் மக்கள் சார்பில் நன்றி தெரிவிப்பதுடன், இன் நன்றியை தங்கள் பிரதமருக்கும் அவரின் சக அங்கத்தவர்களுக்கும் தெரியப்படுத்தும்படி தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்" என்ருர். (ம)

## கொழும்பிலிருந்து விசேஷ ரயில், பஸ் சேவைகள்

மன்னர், ஜூன் 27

மடுமாதா வருடாந்த உற்சவ காலம் ஆரம்பமானதை தொடர்ந்து பக்தர்கள் மடுப்பதியில் வந்து குழுமத் தொடங்கியுள்ளனர்.

ஆலயத்திற்கு வரும் மக்களுக்கு வைத்திய, சுகாதார, குடிநீர் வசதிகள் யாவும் ஆலய நிர்வாகிகளால் விரிவான முறையில் செய்யப்பட்டுள்ளன. இங்கு குழுமும் ஆயிரக் கணக்கான மக்களின் வசதியை முன்னிட்டு உணவு விடுதிகள், பண்டசாலை, மீன் விற்பனை நிலையம் முதலியனவும் மடுவில் திறக்கப்பட்டுள்ளன.

செவ்வாய்க்கிழமை முதல் மடுமாதா ஆலயத்தில் மாலை பிரார்த்தனைகளும் காலை பூசையும் நடைபெற்று வருகின்றன.

சென்ற 23-ம்திகதி ஆரம்பமான உற்சவம் ஜூலை மாதம் 2-ம் திகதி முடிவடையும்.

நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து மடுப்பதிக்கு வரும் யாத்திரீகர்களின் வசதியை முன்னிட்டு மதவாச்சியிலிருந்து விசேஷ ரயில் சேவைகளை ரயில் திணைக்களம் நடத்தி வருகிறது.

கொழும்பிலிருந்து மடுவுக்கு வழமையான தலைமன்னர் ரயிலில் பிரயாணம் செய்யலாம். அத்துடன் சகல ரயில் நிலையங்களிலும் யாத்திரீகர்களின் வசதியை முன்னிட்டு விசேஷ வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இவை தவிர இலங்கைப் போக்குவரத்துச் சபையும் மேலதிக பஸ்களை மடுப்பதிக்கு சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

கொழும்பிலிருந்து விசேஷ பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன. புறக்கோட்டை பஸ் நிலையத்தில் ஆசனங்களை ஏற்கனவே பதிவு செய்யலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## டியூப்செக்குக்கு கல்தா!

பிராக், ஜூன் 27

செக்கோஸ்லோவேகியாவின் முன்னள் தலைவர் திரு. அலெக்சாண்டர் டியூப்செக் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து விலக்கப்பட்டார்.

கடந்த 31 வருடங்களாகக் கட்சியில் அங்கத்துவம் வகித்த டியூப்செக் விலக்கப்பட்டதாக 144 அங்கத்தவர்களைக் கொண்ட செக். கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி நேற்று அறிவித்தது.

## ஹோட்டலில் கலவரம்

கோட்டையில் உள்ள ஹொஸ்பிட்டல் வீதியில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற அசம்பாவித சம்பவத்தைத் தொடர்ந்து பொலீஸ் காவல் போடப்பட்டுள்ளது.

பிரஸ்தாப வீதியில் உள்ள ஹோட்டலுக்குச் சாப்பிட வந்த இருவருக்கும், ஹோட்டல் ஊழியர்கள் சிலருக்கும் இடையில் நடைபெற்ற வாக்கு வாதங்களைத் தொடர்ந்து, சுமார் 50 பேர்கள் கொண்ட காடையர் கூட்டம் ஒன்று இரும்புக் கம்பிகள், போத்தல்கள் சகிதம் ஹோட்டலைத் தாக்குவதற்கு முயன்றதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தின் போது காயமடைந்த இருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (5)

## வண. தேவ ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பையில் 14 உருண்டைப் பொருட்கள் இருந்தன. செய்திப் பத்திரிகையில் 11 சுற்றப்பட்டிருந்தன. 3 ஏயக் கடதாசியில் சுற்றப்பட்டிருந்தன. இவைகளை இன்ஸ்பெக்டர் மெண்டிஸ் பொறுப்பெடுத்தார். பின் இவை ரசாயனப் பரிசோதகருக்கு அனுப்பப்பட்டது.

"கைது செய்யப்பட்டிருந்த சந்தேக நபர்கள் 14-ந் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர். தடை செய்யப்பட்ட ஆயுதச் சட்டப் பிரகாரம் வழக்குத் தாக்கல் செய்ய போதிய ஆதாரமின்மையால் சந்தேக நபர்களை விடுதலை செய்யக் கோருகிறேன்" என்ருர். (ய-15)

## பெரஹறாவில் ஆரம்பித்த காதல் வாழ்வு முறிந்தது

களனிப் பெரஹராவின் போது அவர்கள் முதல் முதல் சந்தித்தார்கள். காதல் மலர்ந்தது. வீட்டுக்கு வரும்படி அவனை அழைத்தாள் கன்னி. அவனும் சென்ருன். திருமணம் நடந்தது. வாழ்க்கையை ஆரம்பித்தார்கள். ஆனல் விரைவிலேயே மண முறிவு ஏற்பட்டது. தனது கணவனின் பாதுகாப்பிலுள்ள பிள்ளைகளைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கோரி ஆள்கொணர்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார் மனைவி.

கம்பஹா நீதவான் திரு. டபிள்யு. பி. என். சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட இந்த வழக்கின் மனுதார் நளினி ராஜரத்ன ஆவார். எதிர் மனுதாரர் எச். பி. நிமால் ராஜரத்ன ஆவார்.

தனது மனைவியுடன் எவ்விதம் தொடர்பு ஏற்பட்டது என்பதை நிமால் விளக்கினர். "1966-ம் ஆண்டு களனிப் பெரஹராபார்க்க நான் சென்றிருந்தேன். அன்று நளினியை முதன் முதலாகச் சந்தித்தேன். தனது விலாசத்தைத் தந்து வீட்டுக்கு வரும்படி அவள் அழைத்தாள்.

"நானும் அந்த அழைப்பை ஏற்று அவள் வீட்டுக்குச் சென்றேன். அவளுடைய தாய் என்னை நன்கு உபசரித்தார். தனது மகளைத் திருமணம் செய்யும்படி கேட்டார். நான் வேலையின்றி இருக்கிறேன் என்பதைத் தெரிவித்தேன். அதனல் பரவாயில்லை வேலை கிடைக்கும்வரை தாமே என்னைக் கவனிப்பதாக அவர் உறுதி அளித்தார்.

"அதற்கு நானும் இணங்கி நளினியைத் திருமணம் செய்தேன். இந்த திருமணத்தை எனது பெற்ருேர் எதிர்த்தனர். பின்னர் நான் வியாங்கொடை தேசிய ஜவுளி கூட்டுத் தாபனத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். எனது மனைவியுடன் தனி வீடொன்றில் வாழ்க்கையை ஆரம்பித்தேன்.

"அங்கே எனது மனைவிக்கும் வேறு ஒரு வாலிபனுக்கும் இடையில் கள்ளக் காதல் ஏற்பட்டுள்ளது என ஒரு வதந்தி உலாவத் தொடங்கியது. உடனே நான் அவளை எனது பெற்ருேர் வீட்டுக்குக் கூட்டிச் சென்றேன். அங்கே ஒன்றரை வருட காலம் வாழ்க்கை நடத்திஞேம்.

"கடந்த 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு நாள் நான் வெளியே சென்று விட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். அப்போது வீட்டு வாசலில் ஒரு கார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டேன். நான் வளவுக்குள் நுழைந்த போது ஒரு இளைஞன் வீட்டுக்குள் இருந்து வெளியே ஓடி வந்து அந்தக் காரில் ஏறி அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டேன்.

"இது பற்றி என் மனைவியை நான் கேட்ட போது அவள் என்னை முறைத்துப் பார்த்ததுடன், அவன் தன் நண்பர்களில் ஒருவன் எனப் பதில் அளித்தாள். அன்று முதல் நாங்கள் பிரிந்து வாழ்க்கை நடத்திஞேம்" என்ருர்.

வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ம)

மதுவையும் சூதாட்டத்தையும் கைவிட்டு
37000 பேர் பாவித்துவரும்

**ஸ்ரீராம வாசனைப்புகை**

கண்திருஷ்டி, சொற்தோஷம், கிரகாதிப்பலன் முதலியவற்றை ஒழித்து, குடும்பத்தில் முன்னேற்றம் அளித்து, வியாபாரத்தில் வெற்றி கண்டு, பகைவர் ஒழித்து கடன் கிட்டி உங்களை லட்சாதிபதியாக்க வல்லது.

ஆயிரக்கணக்கான நற்சான்றுப் பத்திரங்கள் இருக்கின்றன. நீங்களும் பாவித்துப் பாருங்கள்.

★ ஒரு மாத பாவனைக்கு ரூ. 3-25 ★ மூன்று மாத பாவனைக்கு ரூ.7-50. வி. பி. பி. யிலும் அனுப்பப்படும்.

பகைவர்களை அடக்கி, பரீட்சை பந்தயம், வழக்கு, மற்றும் சென்ற இடமெல்லாம் வெற்றியை அடைந்து நினைத்த காரியம் கைகூடுவதற்கு பாவியுங்கள்.

**ஸ்ரீ சரஸ்வதி இராச யந்திரம்**

விலை 15/50 மட்டுமே

★ பெயருக்கு விசேஷமாக மந்திரம் செபித்து பக்குவமாய் தயாரிக்கப்படும் யந்திரத்தின் விலை 22-50. ★ வியாபார ஸ்தலங்களில் வைத்து விளக்கேற்றுவதற்கு உகந்த 6"X5" அளவிலான யந்திரத்தை 27/50 ரூபாவுக்கு செய்து தருவோம். வி. பி. பி. ஏற்றுக்கொள்ளப்படும்.

வேறு எந்தக் காரணத்திற்கும் தவருத நிவர்த்தி செய்து கொடுக்கப்படும். வசியம் சம்பந்தப்பட்டவை விசேஷமாகக் கவனிக்கப்படும். காதலில் வெற்றிபெற்று, பெற்ருேரின் விருப்பத்தை 3 நாட்களில் பெற்றுக்கொடுக்கப்படும். இருவருடைய பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்.

அரசாங்க அனுமதி பெற்ற

**நீலன் கந்தசாமி,**

லக்சல கட்டிடம், நிட்டம்புவ.

இப்பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 28 ஜூன், 1970.
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org